**பயிலரங்க எண்ணிக்கைகள்: 101** நாள்: 07-08-2025

# தமிழ் மருத்துவ மரபுகள்

## பயிலரங்கம்-20

## (09-09-2025 முதல் 18-09-2025 வரை)

## அறிவிப்பும் அழைப்பும்

உலகெங்கினும் வழங்கிவருகின்ற ஆயிரக்கணக்கான மொழிகளில் மிகப் பழைமையான மூல மொழிகளாக விளங்கக்கூடிய சிலவற்றில் செம்மொழித் தமிழிற்குத் தனித்தன்மை வாய்ந்த சிறப்புகள் பலவுள. அவ்வாறானவற்றில் தமிழிற்கே உரித்தான துறைகளாகத் தமிழ் வானியல் மரபு, தமிழ்க் கணிய மரபு, தமிழ் மெய்யியல் மரபு, தமிழ் வேளாண்மை மரபு, தமிழ் மருத்துவ மரபு, தமிழ் நடன மரபு, தமிழிசை மரபு, தமிழ்க் கட்டிடக் கலை மரபு என்பனவாக அவை நீளும்.

மேற்கண்ட சிறப்பிற்குரிய மரபுகளில் மாந்த இனத்தின் அகப்புற நலவாழ்விற்கும் போற்றுதலுக்கும் உரியதாக விளங்குவது தமிழ் மருத்துவ மரபாகும். பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தின் அகத்திணையியலில் உளவியல் மருத்துவக் குறிப்புகள் பல உள. சித்த மருத்துவம் தலையாயதாகப் போற்றும் அகத்தியர் தொல்காப்பியருக்கு ஆசிரியராக விளங்கினார் என்னும் கருத்தும் தமிழுலகில் நிலவிவருகிறது. சங்க இலக்கியங்கள் பல அரிய மருத்துவச் செய்திகளைக் கூறுகின்றன. கடுகு பெருந்தேவனார், காவட்டனார் (புல்), போந்தைப் பசலையார் (பனை), வெள்ளெருக்கிலையார் எனச் சங்கப் புலவர்கள் மூலிகைகளின் பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளனர். மருத்துவர் தாமோதரனார் என்ற சங்கப் புலவர் மருத்துவம் செய்தொழிலாலேயே அறியப்படுகிறார்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் திருக்குறள் மருத்துவத்திற்கென்றே தனியொரு அதிகாரம் கொண்டுள்ளது. ஏலாதி, திரிகடுகம், சிறுபஞ்சமூலம் ஆகிய நூல்கள் தமிழ் மருத்துவத்தின் பெயராலேயே இயற்றப்பட்டவை. அகத்தியர், நந்தி தேவர், திருமூலர், போகர், புலிப்பாணி, கோரக்கர், கொங்கணர், இடைக்காடர்

முதலானோராகப் பதினெண் சித்தர் மரபு தமிழ் மருத்துவத்தினைச் சித்த மருத்துவமாக வளர்த்தெடுத்துள்ளது. சங்க காலத்திற்கு முன்பிருந்தே தமிழரின் தற்காப்புக் கலைகளோடு தமிழ் மருத்துவமும் தென்கிழக்காசிய நாடுகளுக்கும் சீனத்திற்கும் பரவியது. அகத்தியர், போகர் போன்ற சித்தர்களின் வரலாறே இதற்குச் சான்றாகும். தமிழர்களின் மருந்துப் பொருட்களான சாதிக்காய், மிளகு, பட்டை, இலாமிச்சை வேர், வெட்டிவேர், இஞ்சி, ஏலம், சுக்கு, கருவப்பட்டை, மயிலிறகு, நல்லெண்ணெய் எனப் பல மூலிகைச் சரக்குகள் கிரேக்க, உரோமப் பேரரசுகளின் காலத்திலேயே மேற்கு நாடுகளுக்குச் சென்றன. உலக மருத்துவத்தில் தமிழ் மருத்துவத்திற்கென்றே பல சிறப்புகளும் தனித்தன்மையும் உண்டு. உலகில் இன்றளவும் மரபு அறுபடாமல் வழக்கில் உள்ள மருத்துவ முறைகளில் தமிழ் மருத்துவமும் ஒன்று. உலகில் வேறெந்தப் பழைமையான மருத்துவ முறைகளிலும் காணப்படாத இரசவாதம், பற்பம், பாசாணம், செந்தூரம் என்பனவான மருந்தியல் முறைகள் தமிழ் மருத்துவத்தில் மாத்திரமே உள்ளன. வைத்தியம், வாதம், யோகம், ஞானம் முதலான வகைமைகளையுடைய அமைப்பைக் கொண்டதான தமிழ் மருத்துவ மரபுகளின் தொன்மை, தனித்தன்மை பற்றியதாக இப்பயிலரங்கம் நடைபெற உள்ளது.

தமிழ் மருத்துவ மாணவர்கள் நமது மருத்துவ மரபு முறைகளையும் மரபுசார்ந்த சிறப்புக் கூறுகளையும் செயல்முறையுடன் கூடிய பயிற்றுரையின் மூலமாகக் கற்று அறிந்து கொள்ளுதலை முதன்மை நோக்கமாக இப்பயிலரங்கம் கொண்டுள்ளது. தமிழ் மருத்துவ மாணவர்கள் நேரடியாகப் பயன்கொளத்தக்கவாறு நிகழ்த்தப்பெறவுள்ள இப்பயிலரங்கில் சித்த மருத்துவத் துறை சார்ந்த மருத்துவ அறிஞர்களும் தமிழறிஞர்களும் பயிற்சி அளிக்கவுள்ளனர். தொன்மையான தமிழ் மருத்துவத்தின் மரபுசார் வளம், அறிவு, விழுமியங்களைச் சித்த மருத்துவ இளநிலை மாணவர்கள் / பயிற்சி மருத்துவர்கள் மட்டும் பங்கேற்றுப் பயன்பெற இப்பயிலரங்கிற்கு அழைக்கிறோம்.

**பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை – **50**.
2. பயிரங்கு நடைபெறும் நாள்கள் **09-09-2025** முதல் **18-09-2025** வரை **10** நாட்கள்.

3. பயிலரங்கு நேரம்: முற்பகல் 10.00 – 1.00 வரை, பிற்பகல் 02.00 – 05.00 வரை.
4. பங்கேற்பாளர்களே தங்குமிடத்தை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, நாட்படி வழங்கப்படும்.
6. பகலுணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பங்கேற்க விழைவோர் இணையவழி விண்ணப்பத்தை https://forms.gle/7qotCsjev662nt1G8 என்ற இணைப்பின் வழியாகவோ அல்லது கீழே தரப்பட்டுள்ள விரைவுக் குறியீடு (QR Code) மூலமாகவோ பெறலாம்.
8. விண்ணப்பம் வந்துசேரவேண்டிய இறுதி நாள்: **02-09-2025**. இதற்குப் பின்வரும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது.
9. விண்ணப்பக் கட்டணம் ஏதும் இல்லை.
10. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பிவைக்க வேண்டும்.
11. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குப் புலனம்/மின்னஞ்சல் வழியாக ஆணை அனுப்பிவைக்கப்படும்.
12. இப்பயிலரங்கில் பங்கேற்போர் 38 அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ளவேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருவதைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் மற்றும் இடைநிற்றல் இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டாது.
13. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 04-09-2025 அன்று தகவல் தெரிவிக்கப்படும்.
14. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிகளைத் தவறாமல் பின்பற்றிட வேண்டும்.